**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– 2010ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவில் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறந்த சேவை புரிந்தவர்களுக்கு தமிழக அரசு மாநில விருதுகள் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந. 2.1)த் துறை

அரசாணை(டி)எண்.5 நாள்:05–08–2010

ஆடி20, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்கப்பட்டது:

அரசாணை(நிலை) எண்.29, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 28.06.2010.

------

**<u>ஆணை:</u>**

மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றியதற்காக ஆண்டுதோறும் பின்வரும் விருதுகள் சுதந்திர தின விழாவின் போது வழங்கப்பட்டு வருகின்றன:-

1. மாற்றுத் திறனாளிகள் சிறப்பாக பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சியர்.
2. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய சிறந்த மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட நலஅலுவலர்.
3. மாற்றுத் திறனாளிகளுக்காக சிறப்பாக பணியாற்றிய சிறந்த மருத்துவர்.
4. மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் சிறப்பாக வேலை வாய்ப்பளித்த சிறந்த தனியார் நிறுவனம்.
5. மாற்றுத் திறனாளிகள் நலத்திற்காக சிறப்பாக சேவை செய்த அரசு சாராத தொண்டு நிறுவனம்.
6. மகளிர் நலத்திற்காக சிறப்பாக சேவை செய்த அரசு சாராத தொண்டு நிறுவனம்.
7. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த சமூகப் பணியாளர்.
8. மகளிர் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்த சமூகப் பணியாளர்.

2. மேலே குறிப்பிட்ட அரசாணையின்படி மேற்காணும் எட்டு விருதுகளுடன் சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் என்ற விருதினையும் சேர்த்து கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு ஒன்பது விருதுகளை வழங்குவதற்கு ரூ. 2,78,000/– நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

| வ. எண். | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1 | மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிக அளவில்வேலை வாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

| | | |
|---|---|---|
| 2 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ. 50,000/– ரொக்கப் பரிசு. |
| 3 | மகளிருக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.50,000/– ரொக்கப் பரிசு |
| 4 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மகளிருக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் ரூ. 25,000/– ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 8 | சிறந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 9 | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ். |

3. 2010ம் ஆண்டிற்கு விருதுகள் வழங்க 28.7.2010 அன்று மாநில அளவிலான தேர்வுக் குழுவின் கூட்டம் மாற்றுத் திறனாளிகள் நலத் துறையின் அரசுச் செயலாளர் தலைமையில் நடைபெற்றது. தேர்வுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு 2010ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது வழங்கப்படவுள்ள கீழ்க்காணும் விருதுகளுக்குரிய நபர்கள் / நிறுவனங்களை மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார். அரசு கவனமாக பரிசீலித்த பின் 2010 ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது பின்வரும் விருதுகளை வழங்க ஆணையிடுகிறது.

| வ. எண். | விருதின் வகை | விருது பெற தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்கள் / நிறுவனங்களின் பெயர் மற்றும் முழு விலாசம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலை வாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | எஸ். சி. எம். கார்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்,<br>எஸ். எப். எண். 40, நல்லிக்கவுண்டன்பாளையம்,<br>புதூர் பிரிவு, புதுப்பாளையம் அஞ்சல்,<br>அவினாசி தாலுக்கா,<br>திருப்பூர் மாவட்டம்–641 654. |

| | | |
|---|---|---|
| 2. | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் | தி ஸ்பாஸ்டிக்ஸ் சொசைட்டி ஆப் திருச்சிராப்பள்ளி,<br>எண். 5, ரிவைவல் நகர்,<br>இராமலிங்க நகர் தெற்கு, வயலூர் சாலை,<br>திருச்சி –620 017. |
| 3. | மகளிருக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் | மலைச் சாதியினர் நலனுக்கான பொது அறக்கட்டளை,<br>தருமபுரி மாவட்டம். |
| 4 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | திரு. சி. கோவிந்தகிருஷ்ணன்,<br>நிறுவனர், நேத்ரோதயா,<br>எண். 47/1, நொலாம்பூர்<br>பேஸ் 2, முகப்பேர் மேற்கு,<br>சென்னை–600 037,<br>திருவள்ளூர் மாவட்டம். |
| 5. | மகளிருக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | திருமதி. கிரிஜா குமாரபாபு,<br>கௌரவச் செயலாளர்,<br>இந்திய குழந்தைகள் நலச்சங்கம்,<br>5, 3வது மெயின்ரோடு,<br>செனாய் நகர்,<br>சென்னை–600 030. |
| 6 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர் | மரு. சி. இராமகுரு, M.S.,(Ortho),<br>எண். 243, ஏ, திருச்செந்தூர் சாலை,<br>பாளையங்கோட்டை,<br>திருநெல்வேலி–627 002. |
| 7 | மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 1. திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப.,<br>முதுநிலை மாவட்ட ஆட்சியர்,<br>தருமபுரி மாவட்டம்.<br>2. முனைவர் பி. முத்துவீரன், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>தேனி மாவட்டம்.<br>3. டாக்டர் வி.கே. சண்முகம், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 8 | சிறந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் | திரு தி. மனோகர்,<br>மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்,<br>திருநெல்வேலி மாவட்டம். |
| 9 | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் | மாவட்ட மத்திய கூட்டுறவுவங்கி,<br>திருவண்ணாமலை. |

4. மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த சேவைகள் புரிந்ததற்காக மேற்கண்ட நபர்கள் மற்றும் சிறந்த நிறுவனங்கள் (சிறந்த மாவட்ட ஆட்சியர் தவிர) 2010 ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட உள்ள தமிழக அரசு மாநில விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள். சிறந்த மாவட்ட ஆட்சியர்களுக்கான விருதுகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டில் வழங்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
சம்பந்தப்பட்ட நபர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
நகல்:
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
பொது(ஜெனரல்–1)த் துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.